# OS.No.206/2023, Dated 24.09.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 24th day of Sep 2025.

**வா.சா.2 – மண்ணு த/பெ. அய்யாக்கண்ணு வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் பாதிரி கிராமத்தை சேர்ந்தவர். இவ்வழக்கின் வாதி பிரதிவாதியை தெரியும். நெல் வியாபாரம் செய்யும் போது வாதியை எனக்கு தெரியும். பிரதிவாதி ேஹாட்டல் வைத்திருந்த வகையில் எனக்கு அவரை தெரியும். பிரதிவாதியின் பெயர் ஜெயபிரகாஷ் ஆகும். ஜெயபிராகஷ்தான் வாதியிடம் கடன் வாங்கினாரா என்றால் ஜெயபிரகாசும் அவரது மனைவி மகேஷ்வரியும் கடன் வாங்கினார்கள். இந்த வழக்கை யார் பெயரில் தாக்கல் செய்துள்ளார் என்றால் மகேஷ்வரியின் பெயரில் தாக்கல் செய்துள்ளார். மகேஷ்வரியை எனக்கு தெரியாது. நான் அவரை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் முதன்முதலில் பார்த்தேன். 12.06.2012ம் தேதி அடமானம் பத்திரம் எழுதப்பட்டது. பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது, எந்த தேதியில் பதியப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. பத்திரம் எழுதப்பட்ட தேதியிலேயே பணம் கொடுத்தார். அப்போது நான் உடன் இருந்தேன். எங்கு வைத்து பணம் கொடுத்தார் என்றால் பத்திரம் எழுதுபவர் அலுவலகத்தில் வைத்து பணத்தை கொடுத்தார். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. நான் வில்லங்கச் சான்று பெறுவதற்காக அன்றைய தினம் பத்திர எழுத்தரின் அலுவலகத்திற்கு சென்றேன். அந்த அடமானப்பத்திரத்தை கார்த்தி என்ற பத்திர எழுத்தர் எழுதினாரா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அடமானப்பத்திரத்தை எழுதிய நபர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் பத்திரம் எழுதுவதற்கு உரிமம் வைத்துள்ளாரா இல்லையா என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதிக்கு ரூ.3,50,000/– கடனாக கொடுத்தார். எத்தனை பணக்கட்டுகள் இருந்தது என்று நான் பார்க்கவில்லை. நான் பணத்தை எண்ணி பார்க்கவில்லை. ரூ.3,50,000/–

என்று சொன்னார்கள். ஆனால் எவ்வளவு பணம் என்று எனக்கு நேரடியாக தெரியாது. என்ன காரணத்திற்காக கடன் வாங்கினார்கள் என்றும் எனக்கு தெரியாது. எவ்வளவு வட்டி என்று குறிப்பிட்டு எழுதினார்கள் என்றால் ஒரு பைசா வட்டி என்று குறிப்பிட்டார்கள். நான் அந்த அடமானப்பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. ஜெயபிரகாஷம் அவருக்கு தெரிந்தவர் ஒருத்தரும், சாட்சிகளாக கையெழுத்து பேட்டார்கள். மற்றொரு நபரின் பெயர் தெரியாது. அவர்கள் சாட்சி கையொப்பம் போடும்போது நான் உடன் இருந்தேன். அவருடைய பெயரும், அவருடைய தகப்பனார் பெயரையும் நான் கேட்கவில்லை. அவர்கள் சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்து பத்திரத்தில் கையொப்பம் போட்டார்கள். வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. சாட்சி கையொப்பம் போடும்போது மட்டும் தான் நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. வேறு யார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து போட்ட நபர்களை ஏன் அழைக்கவில்லை என்று நான் கேட்டேனா என்றால் கேட்டேன். அவர்கள் பிரதிவாதிக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அழைக்கவில்லை என்று அவர் கூறினார். நான் வாதி நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடமான பத்திரம் குறித்தும் சாட்சி கையொப்பம் குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை எப்போதும் பார்த்ததில்லை என்றால் அவரை சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டும் தான் பார்த்தேன். எத்தனை ரூபாய் முத்திரை தாளிளல் பத்திரம் வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அதில் வேறு யாரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்காளா என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதப்பட்டபோது எங்களை தவிர வேறு நபர்கள் இல்லை. பத்திர எழுத்தர் அலுவலத்தில் நடந்தவை மட்டும் தான் எனக்கு தெரியும் என்றாலும், பத்திர பதிவாளர் அலுவலத்திற்கு நான்

செல்லவில்லை என்றால் சரிதான். அந்த கடன் தொகையை ஜெயபிரகாஷ் தான் வாங்கினாரா என்றால் இல்லை. அவரும் அவர் மனைவியும் வாங்கினார். பத்திரம் எழுதிய தேதியில் நான் அங்கு இல்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.24 18:25:34 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்